# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),**
**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590**

**ஆணை நாள்: 09.11.2020**

**முன்னிலை**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

……………

**வழக்கு எண். SA12821/F/2019**

**திரு P.சந்திரசேகரன் … மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**நிதி ஆலோசகர் (ம) நிறுவனச் செயலர்,**
**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,**
**எண்.1/1(1) மேயர் இராமநாதன் சாலை,**
**எழும்பூர், சென்னை - 600 008. … பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **20.09.2019** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **30.10.2019,**<br>**08.12.2019** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **23.12.2019** |

******

**ஆணை**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (09.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு P.சந்திரசேகரன் மற்றும் திரு M.பாலமுருகன், பொதுத் தகவல் அலுவலர்/ நிதி ஆலோசகர் (ம) நிறுவனச் செயலர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், எழும்பூர், சென்னை ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் **20.09.2019** தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கடந்த 2007-ம் ஆண்டு முதல் இந்நாள் வரையிலும் ஆண்டு வாரியாக நீர்பாசன கடன் திட்டத்தின் கீழ் மாவட்ட வாரியாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் எத்தனை பயனாளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது என்பதையும், அதில் எத்தனை பயனாளிக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதையும், எத்தனை பயனாளிக்கு மானியம் மற்றும் மின் இணைப்பு வழங்க அனைத்து மாவட்டத்தில் இருந்தும் கோரிக்கை (பரிந்துரை) வரப்பட்டுள்ளது என்பதையும் மாவட்ட வாரியாக விபரம், கடந்த 2007-ம் ஆண்டு முதல் தற்பொழுது வரை நீர்பாசன கடன் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கையை மாவட்ட மற்றும் ஆண்டு வாரியாக விபரம், அவ்வாறு மின் இணைப்பு வழங்க எதன் அடிப்படையில் பரிந்துரை செய்யப்பட்டது என்ற விபரம், அவ்வாறு பரிந்துரை செய்தபோது மாவட்ட வாரியாக எத்தனை பயனாளிகளுக்கு மின் இணைப்பு மானியம் வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் தொடர்புடைய தகவல்களை 12 இனங்களில் வழங்கக்கேட்டு பொதுத் தகவல் அலுவலர்/ நிதி ஆலோசகர் மற்றும் நிறுவனச் செயலர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சென்னை என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 22.10.2019 மற்றும் 29.11.2019 ஆகிய தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். அதில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் 30.10.2019 மற்றும் 08.12.2019 ஆகிய தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம், சென்னை மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்/ மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம், சென்னை ஆகியோர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்காததால் மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 23.12.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (09.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

- **இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, தான் கோரிய தகவலை தனக்கு பொதுத் தகவல் அலுவலர் 07.11.2020 அன்று முழுவதுமாக வழங்கியதாகவும் எனவே இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனு மீது எந்த மேல்நடவடிக்கையும் தேவையில்லை எனவும் தொலைபேசி வாயிலாக ஆணையத்தில் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரும் மேல்முறையீட்டாளருக்கு தகவல்கள் முழுமையாக வழங்கப்பட்டுவிட்டதாக ஆணையத்தில் தெரிவித்தார். ஆணையம் அதனை பதிவு செய்து மேல்முறையீட்டாளருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதை உறுதி செய்து மேல்முறையீட்டாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கப்படுகிறது.**

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். SA12821/F/2019**

**பெறுநர்**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**நிதி ஆலோசகர் (ம) நிறுவனச் செயலர்,**
**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,**
**எண்.1/1(1) மேயர் இராமநாதன் சாலை,**
**எழும்பூர், சென்னை - 600 008.**

**மனுதாரர்**
**திரு P.சந்திரசேகரன்,**
**எண்.6/137, கம்மாளங்காடு,**
**செம்மாம்பாளையம், கருமனூர் அஞ்சல்,**
**திருச்செங்கோடு வட்டம்,**
**நாமக்கல் மாவட்டம் - 637 503.**

Copy to: Judgement File/ Spare.
SM/ PC-19.11.2020